முருகப்பெருமான் துணை

**மகான் காரைக்கால் அம்மையார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

05.12.2021, ஞாயிற்றுக்கிழமை

1. ஓங்கார குடில் படைத்த தலைவனே
ஓங்காரன் வடிவான அரங்கனே
ஓங்கார உலகம் அமைக்க வேண்டி
உயர் ஞானமருளும் தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
ஆசிதனை பிலவ தேள் திங்கள்
அறிவிக்க மூவாறோர் திகதி கதிர்வாரம்
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 19ம் நாள், 05.12.2021, ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் காரைக்கால் அம்மையாரும்
வழங்குவேன் உலகோர் நலம்பெற
பாரமான மக்களின் கருமவினையை
பழுதின்றி அகற்றி காக்க
4. காக்கவே காப்பு வேலிதந்து
கருணை வடிவாக அருளும்
ஆக்கமுள அரங்கன் ஆசியே
அகிலத்தையே ஞானவழிநடத்தும்
5. நடத்தும் ஞானி அரங்கனை
நம்பிக்கை வைத்து வருபவர்கள்
இடரெனும் உலகியல் துன்பங்களை
இலகுவாக கடந்து சிறப்பர்
6. சிறப்பறிவு கொண்ட மக்களாகி
சித்தி தரும் ஞான வழிபாட்டை
மறுப்பின்றி முருகா என போற்றி
மக்களெல்லாம் தொடர்ந்து வர
7. வருகவே நடைமுறையிலுள்ள
வதையான பேரிடர்களெல்லாம்
பேருலகை விட்டு அகலும்
பெருந்தயவான அரங்கன் ஆசி
8. ஆசியால் தீட்சை பலத்தால்
அருமருந்தான அன்னதானமதால்
பேசிட கலியுகமக்களுக்கு
பிரச்சினைகள் யாவும் விலகி
9. விலகியே அமைதி பாதுகாப்பு
வினை இனி சேராதபடி
காலமதில் அழியாமை எனும்
கந்த வேலன் எனும் பலம்

10. பலம் கூடி பரிபக்குவமும்
பரோபகாரத் தன்மை கூடி
வலம்வருவர் ஞானக் குடிலில்
வணங்கிவரும் அனைவருக்கும்

11. அனைவருக்கும் அழியாமை
ஆறுமுகனார் வரம் ஆசி
துணைபட தொடர்ந்து வர
தேசமெங்கும் ஞான ஆட்சி மலரும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–